உ

தென்மேற்கு,

காவிரி ஆறுகரைபுரண்ட

# வெள்ளச்சிந்து.

## இரண்டாம்-பாகம்.



சென்னை-திருவல்லிக்கேணி சேப்பாக்கம்

கோ. ச. விநாயகமூர்த்தி செட்டியார்

அவர்களாலியற்றப்பட்டு

M. S. வடிவேலு முதலியாரால்

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலர் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்

இதன் விலை 1924. [அணா 1.

இது கிடைக்குமிடம்:—ஆனந்தாசிரிய புத்தகசாலை நெ. 5/34
நாய்க்கன் தெருவு பார்க் டவுன் போஸ்டு மதராஸ்.

உ

சண்முகன் துணை.

## காவிரி ஆறு கரைபுரண்ட

# வெள்ளச்சிந்து.

## இரண்டாம்-பாகம்.

### சுப்பிரமணியர் துதி.

வெண்பா.

சூலிக்காரன்பெற்றான் குறப்பெண்ணைமாலையிட்டான்
தாலிக்கட்டினபெண்ணை தயங்கவிட்டான்—வாலிதனை
கொன்றவனின்தன்மருகன் குமரேசன் தன்னைநினைக்
கின்றவனே கீர்த்தியுள்ளோன்காண்.

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ரூபகம்.

பல்லவி.

விந்தையைப்பாரீர் வெள்ளத்தால்நேர்ந்திட்ட
விதிதனைக்கேளீர்

அநுபல்லவி.

விந்தையினும்விந்தை வெள்ளத்தால்படுந்தொல்லை
சிந்தையுருகுது செப்பவும்மனமில்லை விந்

சரணங்கள்.

காவிரிநதியின் கனத்தகிளைநதிகள்
கருதும்லக்ஷ்மணதீர்த்தம் கலங்காஹேமாவதி
தாவுமேகாச்சிநதி தாளமுடியாமல்
தவித்தேமநதியினிற் தான்போய்விழுந்திட
பெருகிற்றேவெள்ளம் அருகினிலிருந்தவூரை
ஆக்கிற்றேபள்ளம் இன்னும் 1

பவானிசங்கதியானும்    பகருகின்றேன்கேளும்
பயந்துஜனங்களெல்லாம்    பதரிகொண்டுவோடி
காவாயீசனேயென்று    கர்த்தனைபோற்றியே
கனமாயில்மீதேரி    கலங்குகின்றாரையோ

காலத்தைபாரீர்    கலிபுருஷனால்நேர்ந்த
கோலத்தைகேளீர்    அய்யா 2

பவானியென்னும்பட்டணம்    பார்க்கவழகானது
பகரும்ஜெனங்களோ    ளாயிரமுன்னூறு
பலமானகட்டடம்    பாழாகிபோச்சுது
பாதிவூர்ஜலத்தினில்    அமிழ்ந்துகிடக்குது

இதுவென்னகாலம்    இப்படியுமீசன்
செய்வானோகோலம்    அய்யோ 3

திருமேனிவாசகசாலை    கட்டடம்போச்சு
திரளாகவெழுநூறு    வீடுமடிந்துப்போச்சு
அருமையிரண்டுலக்ஷம்    ரூபாய்நஷ்டமாச்சு
அவதிப்பட்டுஜனம்    அழியக்காலமுமாச்சு

அயனின்சதியோ    அய்யய்யோவிதுவென்ன
அரனின்சோதனையோ    அய்யோ 4

பாழும்வெள்ளம்வந்து    பாழாக்கிபோயிற்று
பருகவன்னமுமின்றி    பசிநோயணுகிற்று
தொழுந்தெய்வமிப்படி    சூதுசெய்தாயிற்று
தேரோவெள்ளத்தினில்    அடித்துக்கொண்டோடிற்று

குமாரபாளையத்தில்    கலைக்கடர்கஷ்டப்பட்டு
கூட்டியோரிடத்தில்    அய்யோ 5

சத்தியமங்கலம்    சதரென்றுசொல்லலாம்
சாத்தியமில்லாமல்    ஜலமோடித்தென்னலாம்
மெத்தவெள்ளம்வந்து    மோதித்துணறலாம்
மேன்மையானபாலம்    ஒடிந்துவிழுந்ததாம்

இருநூருவடிக்கு    இடித்தைம்பதடிவாழம்
எடுத்துவோடிற்று    அய்யோ 6

நானூற்றிஅருபத்து    மூன்றுவீடுபோச்சு
நலமானசின்னவீதி    நாசமதாய்போச்சு

காணும்தபாலாபீஸ்　　கனங்குலைந்துபோச்சு
கவர்னர்அங்குசென்று　　கண்டாரேஇக்காக்ஷி
புகைப்படம்பிடித்தார் புறளும்வெள்ளத்தைக்கண்டு
நகர்நாடிச்சென்றார் 7

நடுவயதுள்ளவோர்　　நங்கையொருத்தியாம்
நாடிக்குழந்தையோ　　டாத்திற்குபோயிற்றாம்
வாடும்குழந்தையும்　　தான்ஜலமுண்டதாம்
வந்தவெள்ளமிவரை　　அடித்துக்கொண்டோடித்தாம்
அய்யய்யோசிவமே　　இவ்விருவர்க்குயிர்கெதி
அமைத்தாயோபவமே　　அய்யோ 8

முப்பபாளையத்தினில்　　முப்பதுவீடுபோச்சு
மோதிவந்துசின்னப்பன்　　பாளையத்தின்பேச்சு
அப்பவேறாறகம்　　அடித்துக்கொண்டுபோச்சு
அய்யய்யோவிதுவென்ன　　அலங்கோலத்தாலேச்சு
புள்ளையம்பட்டி　　புகல்லேவனம்பதுவீடு
போயிற்றுகெட்டி　　அய்யோ 9

கோடயம்பட்டிஜம்பை　　கூடத்தாலப்பட்டி
குக்கிருமங்களில்　　குருகிஜலம்கிட்டி
தேடவப்பக்கூடம்　　கல்யாணிவகைநெட்டி
வாடிப்பயிர்கள்முத　　லரைபோச்சுவிதுகெட்டி
விந்தையைபாரீர்　　வெள்ளத்தால்நேர்ந்திட்ட
விதிதனைகேளீர் 10

## கும்மி.

அன்னமேகொள்ளே காலத்திலேர்ப்பட்ட
அதிசயவெள்ளக் கும்மிபாட
அருமையிலேரும் அய்யனருமுகன்
ஆதிபரன்குரு தாள்பணிந்தேன். 1

காவிரியாற்றுக் கருகிலுள்ளபல
கிராமங்கள்நீரில் முழுகியது
நாவினால்சொல்ல முடியாதுமுள்ளூரில்
நாசமாய்போயிற் றிராறுவீடு. 2

அம்பாபுரமுமதர்க் கருகிலுள்ள
அருமைதாசன்புரமி நககரும்
பெம்மானருளால் இருவீடுபோகாமற்
றெல்லாவீடும்பாழாய் போனதுவே. 3

அய்யனருளால் அங்கொருமேட்டினில்
அவதிப்பட்டுபிள்ளை பெண்டுகளும்
உய்யவழியின்றி யீசன்பதம்போற்றி
உயிர்தப்பிநின்றுமே தானழுதார். 4

ஆண்டவனருளால் ஆண்பிள்ளைகளெல்லாம்
அங்கிருந்தமற மீதேறி
ஆதிக்கடவுளின் அடிகளைப்போற்றி
அமர்ந்துவிருந்தா ரடிமானே. 5

அன்னமேமனிதர்க்கு சேதமில்லைமற்ற
அருமைகால்நடஜீவன் சேதமில்லை
என்னமாயிக்கோரம் இங்குவந்ததோ
என்னிலேனின்னங்கே ளேந்திழையே. 6

பொருஞ்சேதமாயிற்று போனபொருள்தனை
புகலுகின்றேன்கேட்பாய் பத்தாயிரம்
அருள்தந் தானீசனவ ரடியைப்போற்றி
ஆவலாய்புகழ்கொண்டு பாடுங்கடி. 7

வெள்ளத்தாலடிப்பட்ட வேணஜெனங்களை
வெகுவினயத்தோ டழைத்துவந்து
கள்ளமனமில்லாக் கர்ணன்போலவே
காப்பாத்தினாரடி பெண்ணரசே. 8

சீர்பெற்றவைசியர்க ளொன்றுகூடியங்கு
திக்கற்றுவீடற்ற ஜெனங்களுக்கு
கார்முகில்வண்ணனைப் போலவேயிங்கு
காப்பாற்றினாரடிபெண்ணரசே. 9

வீடற்றவர்க்குமே வீடுகட்டித்தர
வேண்டுமென்றுசொல்லி சிலபேர்கள்
பாடுபடுகின்றார் சீக்கிரம்நிரைவேர
பரமனைபோற்றிப் புகழ்வாய்மானே. 10

## ஆசியா - ஆப்பிரிக்கா - லண்டன் - என்ற மெட்டு.

காதலியே கண்ணம்பாடியனையின் நிலைமைதன்னை
கருதுகின்றேன் கேட்பாயடியன்னமே அதை
கவனமாய்கருத்தில்வைப்பாய் சொர்ணமே சாத 1

அணையின் பாலமது அடியோடடித்துப் பேர்ச்சு
ஆணங்கே யின்னும்கேள் சேதியே நானும்
அனுதினம்துதிப்பேன் பரஞ்சோதியே. காத 2

பாலமதைபார்க்கஜெனம் பதரிவெகுபேர்கள் சென்றார்
பார்க்கப்போன வதிசயத்தைகேளடி ரெண்டு
பர்லாங்கு தூரம்நின்றார் பாரடி. காத ௩

ஆவலாய் அணைக்கட்டு அழிந்த விதத்தைக்கண்டு
அதிசயித்து நின்றவ ரனேகம் ஆ-ஆ
ஆச்சுதே வெள்ளஜல வேதம் காத 4

ஸ்ரீரங்கப்பட்டணத்தின் மைசூர்ரஸ்த்தா தனிலே
ஏர்ப்பட்டரோடில் வெகுசேதம் அதை
பார்க்கமுடியவில்லை பாபம் காத 5

ஆடிபதினெட்டாம்தேதி அய்யோவெள்ளம்வருமேவென்று
அச்சங்கொள்ளுகின்றார் வெகுபேருமே அதை
அசட்டைசெய்கின்றார்சிலர் பாருமே காத 6

நஞ்சங்காட்டுநகர் தனிலே நாடியேமுன்னூருவீடு
நாசமாகப்போய்விட்டதன்னீதம் அது
நாவினால்சொல்லபரிதாபம் காத 7

ஷிமோகாநகரில்மறங்கள் சேதமதிகமென்று
செப்பவெந்தனொருநாவுமோ,தமோ அங்கு
சேதத்தின்விபறம் கூறலாகுமோ காத 8

ஷிமோகாவில் இரண்டுலக்ஷரூபாய்சேதமென்று
செப்புகின்றாரிதுவென்னசாலமோ அதை
சீர்திருத்தம்செய்கிறார்கள்பாருமே காத 9

கஷ்ட்ட நிவாரணபண்டுக்கு நாலாயிறம்
கீர்த்தியோடுகவர்மெண்டாரளித்தாரே அதை
கலெக்டர்மனப்பூர்த்தியோடுபெற்றாரே காத 10

## நொண்டிச்சிந்து.

கண்மணியேபாராய் யானும்
கழருகின்றேனெந்தன்சொல்லைக் கவனமாய்கேளாய்
சத்தியமங்கலமடுத்த கோபிசெட்டி
பாளையத்தில்காலலம்ப ஜலத்தைக்காணேன்
பயர்கள்வாடிநிற்கின்றது பார்க்க

பரிதாபமாயிருக்குபாவை யென்சொல்வேன்
பவானிதிருவிளையாடல் பகரவென்றால்
பார்ப்பவர்சொல்வதைக்கேட்டு பதைக்குதென்மனம்
சத்தியமங்கலரஸ்த்தா அடுத்த
அரசூரென்னுங்கிராமம் அதிகநஷ்டம்
வீடுகள்போய்விட்டன ஏழைகள்
வேண்டுமுதவிக்கரி யப்பன்பாளையம்
தங்கியிருக்கின்றார் அவர்கள்
தயங்குவதைகண்டுமெனம் தாளவில்லையே
இப்படியும்செய்குவானோ யீசனுக்கு
இதுவுமொருதிருவிளையாடல்தானோ (கண்)

## ஆலமாமென்பது இதுதானோ என்றமெட்டு.

பார்க்கப்பயமாகுது என்செய்வோமீசா
கார்த்துவருள்தருவாய் கங்கைநேசா பார்

ஆற்றில்வெள்ளம்வந்து அலைகின்றோம்மக்கள்
சோற்றுக்குதிண்டாடி சுழள்கின்றார் பார்

பூமிபொருள்களும்போய் புசிக்கவுணவுமின்றி
சாமியெனக்குவன்னம் தாவெனகேட்கவையோ பார்

ஆதிபறம்பொருளே அய்யாவுன்சோதனையோ
பாதிமதியணிந்த பறமேசின்கட்டளையோ பார்

பெண்டுபிள்ளைகள்வேறு பேதைநாங்கள்வேறாய்
கண்டானந்திக்குறாய் கலியின்கொடுமைதானோ பார்

ஆதரிப்பவர்களை அடைந்தேதஞ்சமென்று
அவர்பாதந்தனில்வீழ்ந்து அன்பாய்புசிக்கின்றோம் பார்

கூரைமீதேறியே கூவிநோய்கோழிபோல்
ஆறுமோசச்செய்து ஆக்கிற்றுவிக்கெதி பார்

அண்டகுடிசையில்லை ஆறுதல்சொல்வோரில்லை
பண்டங்கள்வீணாக பாழும்நதியில்போச்சு பார்

அயனுமிப்படிவிதி அமைத்தானோவரிகிலோம்
கயவர்நாங்களுமிந்த கஷ்டத்திற்குள்ளானோம் பார்

பாலன்விநாயகன் பகரினுனிச்சிந்தை
சீலரேபிழைதனை சீர்திருத்திக்கொள்வீர் பார்

காவிரி ஆறு கரைபுரண்ட வெள்ளச்சிந்து

இரண்டாம்பாகம் முற்றிற்று.

பண்டிதரால் தயார்செய்த.

# சிட்டுக்குருவிசத்தின் லேக்கியம்.

யௌவனர் முதல் விருத்தர் வரையில்
உண்டு சுகங்கண்டதும் அதிசயக்கத் தக்கதுமானது.

---

தூர்வாசர்மலையில் எழுந்தருளியிருக்கும் பரமஞானியும் தவசிரேஷ்டருமாகிய நித்தியானந்த யோகிகள் எமக்கு அனுக்கிரகித்தருளியபடி இந்தச் சிட்டுக்குருவி லேக்கியத்தில், அயச்சாந்த செந்தூரம், வெள்ளி பஸ்பம், கல்கார் பஸ்பம், பொன்னம்பர், கஸ்தூரி, பச்சை கற்பூரம், மலை மூலிகைகள் விதைகள், வேர்வகைகள் பூஜனி விதைகள் முதலிய 196 விதமான ஸ்தம்பனத்திற்குரிய கடைச்சரக்குகள் சேர்க்கப்பட்டு அநேக சிட்டுக்குருவி சத்தைமட்டும் பக்குவம் செய்து சேர்த்துப் பதமாக்கி சாஸ்திரோக்தமாகவும், கைமுறைப் பிசகாமலும் அதிக ருசிகரமான லேக்கியமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சிட்டுக்குருவி லேக்கியத்தில் அயக்காந்தம், வெள்ளி முதலியன சேர்ந்திருப்பதால், அரை அல்லது ஒருமண்டலம் கிரமமாகப் புசிப்போருக்கு, இழந்துபோன ஆண்தன்மையை மறுபடியும் உண்டாக்கிவிடுகிறது. இதில்சிறிதும் சந்தேகமேயில்லை. இதற்குமுன் எப்போதும் அடைந்திராத ஆண்தன்மையும், வீரிய விருத்தியையும், தேகத் திடகாத்திரத்தையும் அதிக வலிமையும் கொடுத்து தேகத்தில் இரத்தத்தைப் பரவச் செய்து வஜ்ஜிர தேகமாக்கிவிடுமே.

இந்தசிட்டுக்குருவிசத்தின் லேக்கியத்தைத் தின்றவர் எவரோ அவர் நெடு நாள் இழந்தஆண் தன்மையைப் பெற்று, என்றுமில்லா சந்தோஷத்தை யடைவார் என்பது உண்மையாய் சொல்லுவேன் இதற்கு பல பத்தியம் இல்லை.

நோயுள்ள ஸ்திரீகளைக் கூடினால், வெள்ளை, நீர் சுருக்கு, அரையாப்பு, கொருக்கு முதலிய நோய்களை வாங்கிக்கொண்டு அந்த நோய் நீங்கும் பொருட்டுபலவித மருந்துகளைத் தின்று அதனால் வெட்டை அதிகரித்து இரத்தம் முரிந்து முகம் வெளுத்து கண்கை கால்களின் நகங்கள் வெளுத்து, அன்னத்து வேஷம், அக்கினிமாந்தம், கை கால்கள் எரிச்சல், அசத்திசோம்பல் முதலிய கொடிய வியாதியுடையோர் கே. எ. சாமி பண்டிதரால் தயார் செய்யப்பட்ட இச்சுட்டுக்குருவி சத்தின் லேக்கியத்தை எண்ணிக்கையாக 48-நாள் யதொரு பத்தியமுமின்றி சாப்பிட்டு வருவார்களானால் மேல் கண்ட ரோகங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி பூரண சந்திரன்போன்ற மு தேஜசும் திடகாத்திரமும், வீரியவிருத்திஸ்தம்பன சத்தி முதலியவும் பெற்று, ஆரோக்கிய சம்பன்னராய் அக்களிப்போடு வாழ்ந்து, வஜ்ஜிர சரீரம்பெற்று சந்தானச் செல்வமடைந்துமகிழ்வடைவார்கள் என்பதில்தடையேயில்லை. இந்த லேக்கியம் வயதுசென்ற கிழவரையும் வாலிபராக்கிவிடும்.

| | |
|---|---|
| (அரைமண்டலம்) 24-நாளைக்கு சாப்டக்கூடிய லேக்கியத்துக்கு ரூ. | 2-0-0 |
| போஸ்டேஜி அணா | 0-5-0 |
| (ஒரு மண்டலம்) 48-நாளைக்கு சாப்பிடக்கூடிய லேக்கியத்துக்கு ரூ. | 4-0-0 |
| தபால் சார்ஜ் இனாம். | |

விலாசம்:—

கே. எ. சாமி அவுஷத சாலை.
நெ. 5/34. நயினியப்பநாய்க்கன் தெருவு,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.